Government of **Western Australia**
**North Metropolitan Health Service**

BreastScreen WA
WA's only accredited screening service

# மார்பகப் புற்றுநோய் சோதனை பற்றிய குறிப்புகள்

**'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA மருத்துவ நிலையம்' (BreastScreen WA clinic) உங்களை வரவேற்கிறது.**

மார்பகப் புற்று நோய் சோதனையை மேற்கொள்வதற்கு **முன்னதாக** இந்த சோதனையைப் பற்றிய முக்கியமான தகவல்களையும் ஒப்புதல் படிவத்தினையும் தயவு செய்து வாசியுங்கள். உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், சோதனை மையத்தில் உள்ள பணியாளர்களால் உங்களுக்கு உதவ இயலும். சோதனையை உங்களால் எந்த நேரத்திலும் நிறுத்த இயலும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

- தாம் கருவுற்றிருக்கக்கூடும் என்று நினைக்கும் பெண்கள் மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்ள வேண்டாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் கருவுற்றிருப்பதற்கான வாய்ப்பு ஏதும் இருந்தால் தயவு செய்து அதை வரவேற்பாளர் அல்லது கதிர்வீச்சுப் படம் எடுப்பவருக்குத் தெரியப்படுத்துங்கள்.
- தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்கள் பால் ஊட்டுவதை முடித்து 3 மாதங்கள் ஆகும் வரை மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்வதைத் தள்ளிவைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தாய்ப்பால் ஊட்டும் காலத்தில் பெண்களுடைய மார்பகத் திசுக்கள் மிகவும் திடமாக இருக்கும் என்பதால் இச்சமயத்தில் மார்பகப் புற்றுநோய்ச் சோதனையானது செயலூக்கம் மிக்கதாக இல்லாமல் போகக்கூடும்.

## மார்பகச் சோதனை குறித்து

மார்பகப் புற்றினால் ஏற்படும் இறப்புகளைக் குறைப்பதே இந்த மார்பக சோதனையின் நோக்கமாகும். தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ள இயலாத அளவிற்குச் சிறியதாக இருக்கும் நிலையில் உள்ள மார்பகப் புற்றுகளைக் கண்டறிவதற்காகத் தற்போது கிடைக்கும் மிகச் சிறந்த சோதனை 'மேமொக்ராம்' (mammogram) அல்லது 'மார்பக எக்ஸ்-ரே' (breast X-ray) எனப்படும் மார்பகப் புற்று சோதனையாகும். எவ்வளவு முன் கூட்டியே மார்பகப் புற்று கண்டுபிடிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு நல்ல பலன் தரும் சிகிச்சையை உங்களுக்கு அளிக்க இயலும்.

மார்பகப் புற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதுதான் 'பரெஸ்ட்ஸ்க்ரீன் WA திட்ட'த்தின் நோக்கமாகும். 50-74 வயது வரையுள்ள பெண்களுக்கு இச்சோதனை மிகவும் பயனுள்ளது என தற்போதைய மருத்துவ ஆதாரங்கள் காட்டுகின்றன. வயதாக ஆக, உங்களுக்கு மார்பகப் புற்று ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது. ஏறத்தாழ 70 சதவீத மார்பகப் புற்றுகள் 50 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கு ஏற்படுகின்றன. தவறாமல் தொடர்ந்து மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்வதன் மூலம் இப்பெண்களிடையே ஏற்படும் இறப்புகளைக் கிட்டத்தட்ட 30 சதம் குறைக்கலாம். 50 வயதிற்கும் குறைந்த வயதுடைய பெண்களுக்கு மார்பகப் புற்று சோதனையால் கிட்டும் பயன்கள் குறைவானவையேயாகும்.

## மார்பகப் புற்று சோதனை எப்படி செய்யப்படுகிறது?

உங்களது மார்புக் கச்சையைக் கழற்றி, மீண்டும் உங்களது மேலாடையை அணியுமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். அல்லது, தேவைப்பட்டால், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் அங்கி ஒன்று கிடைக்கும். விசேடப் பயிற்சி பெற்ற 'எக்ஸ்-ரே' படம் எடுக்கும் பெண் ஒருவர் உங்களுக்கு இந்த மார்பகப் புற்று சோதனைக்கான படங்களை எடுப்பார். மார்பகத்தினை 'எக்ஸ்-ரே' எடுக்கும் போது, படம் தெளிவாய் இருக்க வேண்டும் என்பதற்காக மார்பகம் சில வினாடிகளுக்கு அழுத்திப் பிடிக்கப்படும். இது அசௌகரியமாக இருக்கலாம். பொதுவாக, ஒவ்வொரு மார்பகமும் இரு முறை 'எக்ஸ்-ரே' படம் எடுக்கப்படும், ஆனால் சில வேளைகளில் அதிக படங்கள் எடுப்பதற்கான தேவை ஏற்படலாம்.

## மார்பக 'எக்ஸ்-ரே' படத்தினை யார் ஆய்வு செய்வார்?

மார்பக 'எக்ஸ்-ரே' படங்களை ஆய்வதில் மிகவும் தேர்ச்சி பெற்ற இரண்டு 'எக்ஸ்-ரே' நிபுணர்களது கருத்துக்களின் ஒருமைப்பாட்டின் மீதே உங்களது மார்பகப் புற்று சோதனையின் முடிவு அமையும். அனைத்து மார்பக 'எக்ஸ்-ரே'-க்களும் தனிப்பட்ட சுயாதீன முறையில் ஆய்வு செய்யப்படும். சில தருணங்களில், முதல் இரண்டு 'எக்ஸ்-ரே' நிபுணரது கருத்துக்கள் வேறுபட்டால், மூன்றாவது நிபுணர் ஒருவரது கருத்து நாடப்படும்.

## மீண்டும் 'எக்ஸ்-ரே' படம் எடுக்கும் தேவை எனக்கு ஏற்பட்டால் என்ன செய்வது?

மிக அரிதான நிலைகளில், எடுக்கப்பட்ட படம் தெளிவாக இல்லையெனில், மீண்டும் ஒரு முறை 'எக்ஸ்-ரே' எடுக்க வேண்டும் என்று நிபுணர் கேட்பார். இது தேவைப்பட்டால், உங்களை மீண்டும் வருமாறு கேட்டு கடிதமோ அல்லது தொலைபேசி அழைப்போ உங்களுக்கு வரும். சோதனை செய்யப்படும் மருத்துவ நிலையத்தில் இந்த மறு 'எக்ஸ்-ரே' படங்கள் எடுக்கப்படும்.

## முடிவுகளை அறிவித்தல்

மார்பகப்புற்று சோதனை முடிவுகள் கைப்பேசிக் குறுஞ்செய்தி (SMS) மூலமாக (இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள்ளாக) அனுப்பப்படும், அல்லது முடிவுகளை தபால் மூலமாகப் பெறவும் நீங்கள் தீர்மானிக்கலாம். உங்களுடைய சம்மதத்தின் கீழ் உங்களுடைய மருத்துவருக்கும் சோதனை முடிவுகள் அனுப்பப்படும். மார்பக 'எக்ஸ்-ரே'-யில் புற்றுநோயின் அறிகுறிகள் என்று கருதப்படாத மாற்றங்கள் எதுவம் இருந்தால் அவற்றை அறிக்கையில் தெரியப்படுத்த மாட்டார்கள், மற்றும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாத இந்த மாற்றங்கள் சோதனைகளை மேற்கொள்ளும் பெண்களுக்குத் தெரியப்படுத்தப்படமாட்டாது.

மேலதிக சோதனைகளுக்கென பெண்கள் மீண்டும் அழைக்கப்படுவது சாதாரணமானதே. இதற்கு அவசியம் ஏற்பட்டால், உங்களுடன் இது குறித்துக் கலந்துரையாட 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' உங்களைத் தொலைபேசி மூலம் அழைக்கும். பெரும்பான்மையான இப்படிப்பட்ட சோதனைகளில் மேலதிக ஆய்வுகள் தேவைப்படக்கூடிய அளவிற்கு எவ்வொரு பிரச்சினையும் இருக்காது.

பெருநகர்ப் பகுதிகளில் சோதிக்கப்படும் பெண்களுக்கு 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' மதிப்பீட்டு மையம் ஒன்றில் மார்பக 'எக்ஸ்-ரே' படங்களை மேலும் ஆராய்வதற்கும், அல்லது தேவைப்பட்டால் இதர சோதனைகளை மேற்கொள்ளவும் உதவும் வகையில் 'சந்திப்புநேரம்' (appointment) ஒன்று தரப்படும். 'கிராமப்புற நகரும் மருத்துவ வசதி' (country mobile unit) களில் சோதிக்கப்படும் பெண்களுக்கு அவர்களது வசதியை முன்னிட்டு, நகரும் வாகனம் ஒன்றில் அல்லது 'பன்பரி' (Bunbury) மதிப்பீட்டு மையம் அல்லது 'மண்டுரா' மருத்துவ மையத்தில் (Mandurah clinic) மேலதிக மார்பக 'எக்ஸ்-ரே' பட ஆய்வுகள் நடத்தப்படும்.

**தயை கூர்ந்து கவனிக்க:** எதிர்காலத்தில் எடுக்கப்படும் படங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக மார்பக 'எக்ஸ்-ரே'-க்களை 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA'-வினர் தம் வசம் வைத்திருப்பர்.

### இந்த மார்பகப் புற்று சோதனை எந்த அளவிற்கு நம்பககரமானது?

70 - 90 சதவீத மார்பகப் புற்றுக்களை இச்சோதனைகளால் காட்ட இயலும். மார்பக 'எக்ஸ்-ரே'யில் காணப்பட இயலாத சில புற்றுக்கள் உண்டு. இளம் பெண்களுக்கும் அல்லது 'ஹார்மோன் மாற்று சிகிச்சை'(Hormone Replacement Therapy) பெற்றுவரும் பெண்களுக்கும் மார்பகத் திசுக்கள் (breast tissues) வயதான பெண்களைக் காட்டிலும் திண்மையானதாக (dense) இருக்கும், எனவே இவர்களது மார்பக 'எக்ஸ்-ரே'யில் புற்றினை அடையாளம் காண்பது கடினமாக இருக்கலாம். இவர்களது 'எக்ஸ்-ரே' படத்தினை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்குப் புற்றுநோய் இல்லை என்று சொல்வது கடினமானதாகையால், 'திசு ஆய்வு' (biopsy) உட்பட, மேலதிகமான சோதனைகள் இளம் பெண்களுக்குத் தேவைப்படலாம். மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்வதால் மார்பகப் புற்றைத் தடுக்க இயலாது, ஆனால் ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடிப்பது நல்ல பலனளிக்கும் சிகிச்சையினைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உறுதிசெய்யும்.

### மார்பக 'எக்ஸ்-ரே' எடுத்துக் கொள்வதால் தீங்கு ஏதும் உண்டா?

'மார்பக 'எக்ஸ்-ரே' படம் எடுக்கும் போது, பயன்படுத்தப்படும் அழுத்தத்தின் காரணமாக மார்பகத்தில் தற்காலிக நொய்வு (tenderness) அல்லது (bruising) வலி ஏற்படலாம். மார்பகத் திசுவிற்கு நீண்டகாலத் தீங்கு எதையும் இது ஏற்படுத்தாது. ஓவ்வொரு 'எக்ஸ்-ரே' படம் எடுப்பதற்கும் குறைந்த அளவிலான கதிர் வீச்சு (radiation) பயன்படுத்தப்படும். இந்தக் கதிர்வீச்சின் காரணமாக ஏற்படும் ஆபத்து மிகக் குறைவு என்று தற்சமயம் உள்ள ஆதாரம் காட்டுகிறது. மார்பக 'எக்ஸ்-ரே' எடுத்துக் கொள்வதால் ஏற்படும் பலன்கள் இந்த ஆபத்தினை விட அதிகமாகும்.

### எனக்கு இப்போது மார்பகத்தில் கட்டியோ அல்லது வேறு ஏதும் பிரச்சினையோ இருந்தால் என்ன செய்வது?

மார்பகத்தில் கட்டி ஏதும் இருப்பதையோ, மார்பகக் காம்புகளிலிருந்து ஏதும் கசிவு இருப்பதையோ, மார்பகங்களில் வேறு ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையோ நீங்கள் கவனித்திருந்தால், மார்பக 'எக்ஸ்-ரே' எடுப்பதற்கு முன்னதாகவே, 'எக்ஸ்-ரே' நிபுணரிடம் இதைத் தயவு செய்து தெரிவியுங்கள். மார்பக சோதனை முடிவுகள் சாதாரணமானதாக இருந்தாலும், இந்த அறிகுறிகள் குறித்து உங்கள் மருத்துவரை நீங்கள் பார்க்க வேண்டியது முக்கியமானதாகும்.

### எனது பொது மருத்துவரைப் பற்றிய விவரங்களை உங்களுக்கு நான் ஏன் கொடுக்க வேண்டும்?

உங்களுக்குச் சிறந்த கவனிப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக, உங்களது உடல் நலம் சார்ந்த அனைத்து விவரங்களும் உங்களது மருத்துவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். உங்களது மார்பக சோதனை முடிவுகளை அவருக்கு அனுப்ப நாங்கள் விரும்புகிறோம். ஒரு மார்பக 'எக்ஸ்-ரே' சோதனைக்கும், அடுத்த சோதனைக்கும் இடைப்பட்ட காலத்தில் உங்கள் மார்பகங்களை நீங்கள் தொடர்ந்து சோதித்து வருவதும், மாற்றங்கள் ஏதும் காணப்பட்டால் இதை உடனே உங்களது மருத்துவருக்குத் தெரியப்படுத்துவதும் முக்கியம். உங்களது மார்பகங்கள் உங்களது மருத்துவரால் தொடர்ந்து சோதிக்கப்பட வேண்டும் என நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

### உயரம் மற்றும் உடல் எடையைப் பற்றிய தகவல்கள்

மார்பக 'எக்ஸ்-ரே' எடுக்கும்போது உயரம் மற்றும் உடல் எடையைப் பற்றிய தகவல்களை 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' சேகரிக்கும். எதிர்காலத்தில் நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் மார்பக சோதனைகளின் செயல்திறனை மேம்படுத்த இந்தத் தகவல்கள் உபயோகமானதாக இருக்கக்கூடும். இன்று உங்களுடைய உயரம் மற்றும் உடல் எடையைப் பதிவு செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா என்று 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' உங்களைக் கேட்கிறது. தேவைப்பட்டால் நீங்கள் பயன்படுத்துவதற்காக எடை பார்க்கும் இயந்திரம் மற்றும் உயரத்தை அளக்கும் சாதனம் ஒன்று உங்களுக்குக் கிடைக்கும். இதில் பங்குபற்றுவதென்பது முற்றிலும் சுயவிருப்பாகும். இச்சோதனையில் நீங்கள் பங்குபற்றவில்லை என்பதனால் உங்களுக்கு வழங்கப்படும் சேவையில் எவ்வொரு பாதிப்பும் ஏற்படாது. இதைப் பற்றிய கேள்விகள் ஏதும் உங்களுக்கிருந்தால், 9323 6703 எனும் இலக்கத்தில் 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' -வுடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது உங்களுடைய கருத்துரையை அளிப்பதற்காக எமது பின்னூட்டல் ஏடு ஒன்று வேண்டுமென வரவேற்பில் கேளுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்குத் தயவு செய்து www.breastscreen.health.wa.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.